**கொடபொல பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொடபொல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கொடபொல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டு தொடர்பாக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 1,495,325 இற்கான மூன்று நிலையான வைப்புக் கணக்குகள் தொடர்பான வட்டி மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 03 நிலையான வைப்புக்கள் தொடர்பாக பெற வேண்டிய வட்டி மற்றும் 03 நிலையான வைப்பு மீதி முறையே ரூபா 789,624 தொகையினால் மற்றும் ரூபா | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1,653,626 தொகையினால் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | மாத்தறை மற்றும் கொடபொல முத்திரைக் கட்டண வருமானம் என அட்டவணைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்த பெற வேண்டிய ரூபா 12,091,250 தொகை முத்திரைக் கட்டணம் மற்றும் மீளாய்வாண்டின் இறுதி 03 மாதங்களுக்குரிய பெற வேண்டிய ரூபா 994,091 இற்கான நீதிமன்றத் தண்டப் பணம், வருமானம் என கணக்கீடு செய்திருக்கவில்லை. | மாகாண வருமானத் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்டு அனுப்பப்பட்டிருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 262,000 இற்கான தொகை கணக்கீடு செய்யப்பட்டது என மற்றும் பரிந்துரைக்கப்பட்டிருக்காத ரூபா 991,091 நீதிமன்றத் தண்டப் பண வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | முன்னைய ஆண்டுகள் தொடர்பாக பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 12,514,500 தொகை காணப்பட்ட போதிலும் அதனை ரூபா 4,874,000 தொகை என சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 7,640,500 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த வருடம் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்வதற்கு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | பொருட்பதிவேட்டு மற்றும் நுகர்வு தன்மையுள்ள ரூபா 118,749 தொகை பெறுமதியான 68 விடயங்கள் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் மற்றும் ரூபா 104,165 தொகை பெறுமதியான 39 விடயங்கள் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் கீழும் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், சபை வளவில் பொருத்தப்பட்டிருந்த ரூபா 519,740 தொகை பெறுமதியான CCTV கெமரா முறைமை நிறுவியிருத்தல் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 51,472,021 தொகைக்கான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த மீண்டும்வரும் செலவு ரூபா 1,356,373 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 5,833,966 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 2,014,003 | 2,653,246 | 2,616,855 | 1,082,036 | 2,113,000 | 1,742,876 | 1,893,544 | 1,045,645 |
| ii. | வாடகை | 13,617,000 | 8,685,888 | 8,962,047 | 990,729 | 6,610,000 | 4,613,649 | 4,888,161 | 1,266,888 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,112,000 | 1,484,769 | 1,484,769 | - | 2,837,000 | 298,247 | 298,247 | - |
| iv. | ஏனைய வருமானங்கள் | 16,200,000 | 13,627,853 | 14,112,794 | 1,906,882 | 13,947,000 | 4,122,398 | 4,087,785 | 2,391,823 |
| | மொத்தம் | 33,943,000 | 26,451,756 | 27,176,465 | 3,979,647 | 25,507,000 | 10,777,170 | 11,167,737 | 4,704,356 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருட ஆரம்பத்தில் நிலுவை வீதவரி மீதி ரூபா 60,285 தொகையாகக் காணப்பட்டதுடன் 850 அலகுகள் தொடர்பாக சிட்டையிடல் ரூபா 617,431 தொகையுடன் ரூபா 677,716 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 569,636 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு 07 வீதவரி அலகுகள் தொடர்பாக ரூபா 108,080 இற்கான | நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவை மீதியொன்று காணப்பட்டது. அவற்றில் ரூபா 140,414 தொகைக்கான மீதிகள் 2 வருடங்களுக்கும் 5 இற்கும்இடைப்பட்ட காலம் முதல் அறவிடப்பட வேண்டியிருந்தது. | | |
| (ஆ) | முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என கொடபொல வடக்கு மற்றும் கொடபொல தெற்கு இனங்கண்டிருந்த போதிலும் வீதவரி ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2024 பெப்ரவரி 24 திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஆதன அறிக்கை தயாரிக்கப்பட்டு பெறுமதி மதிப்பீடு மேற்கொள்வதற்குரிய அலுவல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | வருட ஆரம்பத்திலுள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 70,358 தொகையாகக் காணப்பட்டதுடன் சிட்டையிடல் ரூபா 40,956 தொகையுடன் ரூபா 111,314 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடு ரூபா 47,440 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 63,874 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | தொடர்ந்தும் நிலுவை ஏக்கர் வரி அறவீடு செய்வதற்காக காணிகள் காணப்படும் இடங்களுக்கு சென்று அறவீடு செய்யப்படுவதுடன், அவ்வாறு முடியாத மீதிகளை பதிவழிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | வருட ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வியாபார வரி மீதி ரூபா 495,870 தொகையாகக் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது சிட்டையிடல் ரூபா 1,972,860 தொகையுடன் ரூபா 2,468,730 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 1,977,780 தொகை ஆகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 490,950 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. வருட இறுதியில் உள்ளவாறு முன்னைய ஆண்டுகள் தொடர்பாக ரூபா 304,070 தொகை மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் அவை மொத்த நிலுவையில் 62 சதவீதமாக இருந்தது. | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவைத் தொகையில் 2024 ஏப்ரல் 30 திகதியளவில் ரூபா 74,200 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்தது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (v) | சபைக்கு சொந்தமான 03 மீன்பலகைகள் தொடர்பாக 2 வருடங்களுக்கு 5 இற்கும் இடைப்பட்ட காலம் முதல் அறவிடப்பட வேண்டிக் | குறிப்பிட்ட நிலுவையை அறவீடு செய்வதற்காக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அந்த வழக்கு | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்ட ரூபா 723,919 இற்கான வாடகை ஒன்று வருமானம் மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்திருக்கவில்லை. | விசாரிக்கப்பட்டு வருகின்றது என. | |
| (ஊ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவில் நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 329,753 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட 2023 செப்தெம்பர் மாதத்திற்குரிய நீதிமன்றத் தண்டப் பணம் 2024 ஜனவரி 04 ஆம் திகதி கிடைத்திருந்தது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 126 உப பிரிவிற்கு இணங்க நகர்சார் அல்லாத அதிகார பிரதேசத்தில் காணப்படும் கட்டிடங்களின் வரைபடங்கள் அங்கீகரித்தல் காணிகளை துணைப் பகிர்வு மேற்கொள்ளல் தொடர்பான அலுவல்கள் மற்றும் கேட்போர் கூடத்தை வாடகைக்கு கொடுத்தல் மற்றும் பெட்னா சருக்குக்கல் வருமானம் அறவீடு செய்தல் தொடர்பாக துணைச் சட்டங்கள் சட்டவாக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | துணைச் சட்டங்களுக்கான வரைபுகள் தயாரிக்கப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்ட பின்னர் அதில் குறைபாடுகள் காணப்படுகின்றது என அறிவித்திருந்தமையால் துணைச் சட்டங்கள் தயாரிக்கும் அலுவல்கள் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தது எனவும் விசாரணை உத்தியோகத்தர்கள் உதவியை பெற்று எதிர்காலத்தில் அந்தக் கருமங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | துணை சட்டங்கள் விரைவாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரமாகும் சுமார் 6 தொன் குப்பைகளில் உக்காத குப்பைகள் மீள்சுழற்சிக்கு அனுப்பப்படுவதற்காக நிரந்தர மற்றும் முறையான குப்பை முகாமைத்துவ செயற்திட்டமொன்று மீளாய்வாண்டின் போதும் செயற்படுத்தியிருக்காததுடன் உக்காத குப்பைகளை அனின்கந்த பிரதேசத்தில் அமைந்துள்ள சபைக்கு சொந்தமான | கொள்வனவாளர்களின் தேவைப்பாட்டின் படி பொலிதீன் சுத்தம் செய்து பெற்றுக் கொள்வதற்காக வசதிகள் காணப்படாமையால் அவற்றை சேகரிக்கப்பட்டது எனவும் ஏனைய உக்காத குப்பைகளை கிடங்குகளில் போட்டு மூடுதல் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் கோரப்பட்டுள்ள இன்சியூலேடர் | முறையான குப்பை முகாமைத்துவத் திட்டமொன்று செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| காணி ஒன்றில் கிடங்குகளில் புதைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இயந்திரம் கிடைத்த பின்னர் உக்காத குப்பைகளை உரிய முறையில் எரித்து சுற்றாடலுக்கு நேயமான முறையில் அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | |

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஏப்ரல் 10 ஆந் திகதி ரூபா 900,900 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த பீனிக்ஸ் தாமரை வகையின் 1300 பிளாஸ்டிக் கதிரைகளில் பற்றாக்குறையாகக் காணப்பட்ட 170 கதிரைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்து பொறுப்புச் சொல்லவேண்டியவர்களை இனங்கண்டு குறிப்பிட்ட பெறுமதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கதிரைகள் காணாமல் போதல் தொடர்பாக எழுத்துமூல சாட்சிகள் எதுவும் இதுவரை கண்டறிய முடியாமல் இருப்பதனால் கதிரைகள் இருப்பின் பற்றாக்குறையினை குறைத்துக் கொள்வதற்கு முடியாமல் காணப்படுகின்றது எனவும் ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவீடு செய்வதற்காக நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இற்கு இணங்க விசாரணை உத்தியோகத்தரின் தலைமையில் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும், எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையில் ஏற்படாமல் இருப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**3.3 முகாமைத்துவத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 7.2 மில்லியன் தொகையில் செலவிடப்பட்டு ஒரு தனியார் நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்திருந்த JCB இயந்திரம் கோளாறுடன் காணப்படுவது என குறிப்பிட்டு 2012 ஆண்டில் மேல் மாகாணம் சார் உயர்நீதிமன்றத்தில் (வாணிப) வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டு அதற்காக சபை நிதியத்திலிருந்து சட்டவரைஞர் ஆலோசனைக் கட்டணமாக ரூபா 765,250 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் சபை வழக்கில் தோல்வியடைந்திருந்தமையால் 2022 ஆண்டில் சட்ட ஆலோசனை நிறுவனமால் உயர்நீதி மன்றத்தில் மேன்முறையீட்டு மனு ஒன்று தாக்கல் | உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யும் படி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் அதற்கான சட்ட ஆலோசனை கட்டணம் செலுத்தப்படவில்லை எனவும், 2024 ஏப்ரல் 27 ஆந் திகதி வரை இந்த வாகனம் தொடர்பாக கண்டறிவதற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவின் அங்கத்தவர்கள் எவரும் விசாரணைக்காக வருகை தந்திருக்கவில்லை என. | திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள வேண்டும். |

செய்யும் படி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அதற்குரிய விசாரணை அலுவல்களும் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 05 ஹோட்டல்கள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகளில் இருந்து 2020 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக 1 சதவீத கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் 2019 கணக்காண்டு தொடர்பாக ஒரு நிறுவனத்திலிருந்து ரூபா 1,018,580 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட போதிலும் ரூபா 707,996 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தமையால் கணக்காய்வுத் திகதியாகிய 2024 பெப்ரவரி 12 திகதியளவிலும் ரூபா 310,584 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | சுற்றுலா சபையில் அங்கீகாரம் பெற்றிருந்த 05 ஹோட்டல்கள் காணப்பட்டதுடன் அவற்றில் 03 கட்டணம் செலுத்தி அனுமதிப் பத்திரம் பெற்றிருந்தது எனவும் ஒரு நிறுவனத்திற்கு எதிராக, வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போதிலும் வாடகையாளர் இறந்திருந்தமையால் புதிய வாடகையாளருக்கு கட்டணம் செலுத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளும் படி அறிவிக்கப்பட்டது எனவும், ஏனைய நிறுவனங்கள் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக மூடப்படக்கூடிய நெருக்கடி நிலைமைக்கு முகங்கொடுத்திருந்தமையால் கட்டணத்தை பகுதிகளாக செலுத்துவதற்காக சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என. | சட்டத்தின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நகர எல்லையை சேர்ந்த தெனியாய பல்லேகம பிரதான பாதையின் மத்தியில் இருந்து 50 அடி கட்டிட எல்லை வைக்காமல் 52.14 சதுர மீற்றர் உடைய ஒற்றை மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | KPS/BA/UDA/2022/02 இலக்கம் கொண்ட கட்டிட விண்ணப்பம் தொடர்பாக துண்டு வரைபில் 6 பர்சஸ்களை விட குறைவாக இருந்தமையால் நகர அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட குழுவினால் அங்கீகாரம் வழங்க முடியாது என கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என. | வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | இலக்கம் 310/2 பல்லேகம பாதை, தெனியாய என்ற இடத்தில் இரண்டுமாடி வர்த்தகக் கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக வழங்கியிருந்த அபிவிருத்தி | கட்டிட வரைபில் முதலாம் மாடிக்காக ROOF TOP பகுதி உட்படுத்தி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது எனவும், வரைபிற்கு புறம்பாக | அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை முறைப்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு |

| | | |
|---|---|---|
| அனுமதிப்பத்திரத்தை பரிசோதனை செய்த போது ROOF TOP பகுதியும் உள்ளடங்க 03 மாடிகளைக் கொண்ட கட்டிடம் ஒன்று, தெனியாய பல்லேகம பிரதான பாதையின் மத்தியிலிருந்து 32 அடிகள் எல்லையில் நிர்மாணிக்கப்பட்டு வந்திருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்டிருந்த கட்டிட வரைபின் படி தரை மாடியின் அளவு 94.39 சதுர மீற்றர்களாக இருந்த போதிலும் நிர்மாணிக்கப்பட்டிருந்த தரைமாடி 116.6 சதுர மீற்றர்களாகக் காணப்பட்டது. | நிர்மாணிக்கப்பட்டிருந்தமையால் திருத்தப்பட்ட வரைபு ஒன்று சமர்ப்பிக்கும் படி அறிவுறுத்தப்பட்டது எனவும், தெனியாய பல்லேகம பாதையின் மத்தியில் இருந்து 35 அடி தூரத்தில் நிர்மாண வேலைகள் பரிந்துரைக்கப்படுகின்றது என மாகந்துரை பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. என. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொழிற்சங்க மாநாட்டில் பங்குபற்றும் உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்காக தனியார் தரப்பினருக்கு கொடுப்பனவு செய்வதற்கு சட்ட ஏற்பாடுகள் காணப்படாத போதிலும் 2023 ஜுலை 29 திகதி மட்டக்களப்பு சர்வோதய நிலையத்தில் நடைபெற்ற மாகாண அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் சங்கத்தின் 2023 ஆண்டில் வருடாந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்காக பிரதேச சபையின் 7 உத்தியோகத்தர்களுக்கு தேவையான போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்காக ரூபா 88,900 தொகை தனியார் தரப்பினருக்கு சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | ஆளுனரின் இலக்கம் G/SP/4/3/8/06 மற்றும் 2023 செப்தெம்பர் 06 திகதி கடிதத்தின் மூலம் வழங்கியிருந்த அங்கீகாரத்தின் படி மாநாட்டிற்கு அழைப்புக் கடிதம், புகையிரத விலைகள் அழைப்புக் கடிதம் மற்றும் குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் அதற்கு பங்குபற்றியமையை உறுதிப்படுத்தும் அனைத்து ஆவணங்களும் பரிசோதனை செய்யப்பட்டு தாபனக் கோவையின் அத்தியாயம் XXV பிரிவு 2 இன் படி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது என. | தாபனக் கோவை, நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.6 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டு கிராமிய பாதைகள் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 1,446,020 தொகை செலவிடப்பட்டு அச்சுக்கற்கள் பரப்பி அபிவிருத்தி செய்யும் 2 நிர்மாண வேலைகள் தொடர்பாக பாதை ஓரத்தை நிர்மாணிக்கும் போது தேவையான விதத்திற்கு பாதை ஓரம் நிர்மாணிக்கப்பட்டிருக்காமையால் கொங்கிரீட் கனமீற்றர் ஒன்றிற்கு ரூபா 19,532.25 வீதம் 1.86 கனமீற்றர்களுக்காக ரூபா 36,330 | குறிப்பிட்ட 02 நிர்மாண வேலைகளில் இஹலகம எச்.ஜீ. பாதை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக மேலதிகமாக பில்பத்திரத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்த ரூபா 32,652 இற்கான தொகை தற்போது அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | நிறைவேற்றப்பட்ட வேலைப் பகுதிகளுக்காக கொடுப்பனவு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையும் பாதை ஓரங்கள் தயாரிக்கும் போது குறிப்பிட்ட உயரத்திற்கு வடிவமைப்புக்கள் பயன்படுத்தப்படாமையால் 25.05 சதுரமீற்றர் வடிவமைப்புக்களுக்காக ரூபா 23,232 இற்கான தொகையொன்றாக கூட்டுத்தொகை ரூபா 59,562 இற்கான தொகையொன்று மிகையாக பில்பத்திரங்களில் உட்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது தென்மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூபா 919,717 தொகை செலவிடப்பட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த தன்தெனியஹேன பாதை கொங்கிரீட் பரப்பி அபிவிருத்தி செய்யும் போது 01 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் கொங்கிரீட் பரப்புவதற்கு முன்னர் பாதையின் மேற்பகுதி 0.10 மீற்றர் மண் வெட்டப்பட்டு தாழ்த்துவத்திற்காக மண் 21.75 கன மீற்றர் வெட்டுவதற்காக ரூபா 1,848.65 வீதம் ரூபா 40,208 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தியிருந்த போதிலும் 2024 பெப்ரவரி 12 திகதி மேற்கொள்ளப்பட்ட வெளிக்களப் பரிசோதனையின் போது பாதைக்கு கொங்கிரீட் பண்ணுவதற்கு முன்னர் பாதையின் மேற்பகுதியிலிருந்து மண் வெட்டி அகற்றப்படல் ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக பதில் வழங்குவதற்கு காலம் போதியனவாக காணப்படாமையால் பதில் வழங்குவதற்கு மேலதிக 02 வார காலம் வேண்டப்பட்டுள்ளது என. | நிறைவேற்றப்பட்ட வேலைப் பகுதிகளுக்காக கொடுப்பனவு செலுத்த வேண்டும். |
| (இ) | ரூபா 312,499 இற்கான முடிவுற்ற வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த ஹென்பர்ட் தோட்டத்தின் பொது கழிவறை வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிர்மாணவேலையின் 02 வேலை விடயங்களில் 500 லீற்றர் அளவான Arpico Plastishell Hybrid Double Layer வகையான பிளாஸ்டிக் நீர்தொட்டி ஒன்று பொருத்துதல் மற்றும் Otto/ Rosell அல்லது அதற்கு சமமான வகையையுடைய 02 கழிவறை கிண்ணங்கள் பொருத்துதல் ஆகிய வேலைப் பகுதிகள் அதற்குரிய வேலை விபரங்களுக்கு இணங்க நிறைவேற்றியிருக்காத போதிலும் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 29,470 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. மேலும் | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக பதில் வழங்குவதற்கு காலம் போதியனவாக காணப்படாமையால் பதில் வழங்குவதற்கு மேலதிக 02 வார காலம் வேண்டப்பட்டுள்ளது என. | நிறைவேற்றப்பட்ட வேலைப் பகுதிகளுக்காக கொடுப்பனவு செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கூறிய நிர்மாணவேலையின் 05 வேலை விடயங்கள் தொடர்பாக அளவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளின் அளவு நிறைவேற்றியிருக்காத போதிலும் ரூபா 13,474 தொகை ஒப்பந்தக்காரருக்கு மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மெதேரிபிடிய பழைய பாலத்திற்கு பதிலாக புதிதாக பாலம் ஒன்று நிர்மாணிப்பதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு சாட்டப்பட்டிருந்த ஒப்பந்த வேலை தொடர்பாக தற்காலிக பாலம் ஒன்று நிர்மாணித்தல் குறிப்பிட்ட ஒப்பந்தக்காரரின் பணிப் பொறுப்பு ஒன்றாக காணப்பட்ட போதிலும், கொடபொல பிரதேச சபையினால் குறிப்பிட்ட பாலம் நிர்மாணிப்பதற்காக பாரந்தூக்கி பெறிக் கட்டணம் மற்றும் சீமெந்து வழங்குவதற்காக ரூபா 420,604 இற்கான தொகையொன்று சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக பதில் வழங்குவதற்கு காலம் போதியனவாக காணப்படாமையால் பதில் வழங்குவதற்கு மேலதிக 02 வார காலம் வேண்டப்பட்டுள்ளது என. | உடன்படிக்கை மேற்கொண்டிருந்த ஒப்பந்தக்காரருக்கு மாத்திரம் கொடுப்பனவு செய்ய வேண்டும். |